1994 ஏப்ரல் 4]

தருமபுரி மாவட்டத்தில் பால் பவுடர் தொழிற்சாலையை நவீனப்படுத்துதல்

***20918-திரு. கா. பூ. முனுசாமி:**

மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தருமபுரி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் பால் பவுடர் தொழிற்சாலை நவீனப்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தர்மபுரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம், கிருஷ்ணகிரியில் தனித்தன்மை வாய்ந்த நவீன இயந்திரங்களைக் கொண்டு பால் பவுடர் தொழிற்சாலை நிறுவி அனுபவமிக்க தொழில் நுட்ப பொறியாளர்களைக் கொண்டு சிறந்த முறையில் பராமரித்து வருவதால் இப்பால் பவுடர் தொழிற்சாலையை தற்போது நவீனப்படுத்த வேண்டிய அவசியமில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலையை 1982-லே நிறுவியிருந்தாலும், அதனுடைய இயந்திரங்களுடைய கண்டுபிடிப்புகள் அதற்கு பின்னோக்கி, 15 ஆண்டுகளுக்கு முன்பாகக் கண்டுபிடிக்கப்பட்ட இயந்திரங்கள்தான் அந்தத் தொழிற்சாலையில் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆக மொத்தமாக 22 ஆண்டுகளுக்கு முன்பாகக் கண்டுபிடிக்கப்பட்ட இயந்திரங்கள், இன்று நடைமுறையில் இருந்துகொண்டிருக்கின்றன. இப்போது செலவைக் குறைத்து, அதே நேரத்தில் பவுடர் ஆக்கப்படுகின்ற அந்த பவுடர்கள் நீண்டகாலமாகக் கெடாமல் இருக்கின்ற வகையிலே பதப்படுத்தக் கூடிய தன்மையில் புதிய புதிய கண்டுபிடிப்புகள் இப்போது உலகெங்கும் கண்டுபிடித்து நடைமுறையில் இருந்து கொண்டிருக்கின்றன. உதாரணமாக பால் துறையிலே உலக அளவிலே முன்னிலையில் நின்று கொண்டிருக்கக்கூடிய டென்மார்க் நாட்டினிலே புதிய முறைகளைக் கண்டுபிடித்து பால் பவுடரை உருவாக்குகின்ற நேரத்தில், அதை குறைந்தது ஓராண்டு, 2 ஆண்டுகளுக்கு மேலாக பதப்படுத்தி வைக்கக்கூடிய நிலையில் உள்ள இயந்திரங்கள்

கண்டுபிடிக்கப்பட்டு நடைமுறையில் இருக்கின்றன. அதுபோன்ற இயந்திரங்களை இந்தத் தொழிற்சாலையிலே கொண்டுவர அரசு ஆவன செய்யுமா என்பந்த அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலிக்கும்.

திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தர்மபுரி மாவட்டத்தில் பால் உற்பத்தி கடந்த ஆண்டுகளைவிட அதிக அளவில் உற்பத்தியாகிக் கொண்டிருக்கிறது. மேலும் பக்கத்து மாநிலமான கர்நாடக மாநிலத்திலிருந்தும், பக்கத்து மாவட்டமான வட ஆற்காடு மாவட்டத்திலேயிருந்தும்கூட, பால் கொண்டுவரப்பட்டு, இந்தத் தொழிறசாலையில் பால் பவுடர் உற்பத்தி செய்துகொண்டு வருகிறார்கள். எனவே மேலும் அதிகமாக உற்பத்தியாகின்ற பாலை பவுடர் செய்கின்ற வகையிலே இந்தத் தொழிற்சாலையை அதிநவீன கருவிகளைக் கொண்டு விரிவுபடுத்த அரசின் செயற்குறிப்பில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செயற்குறிப்பு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *173*, செல்வி எல்.சுலோசனா ; மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்.

173–

மேட்டுப்பாளையம் தொகுதியை சிறுதொழில் துறையில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்க வேண்டுதல்.

***9974–செல்வி எல். சுலோசனா:**

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

மேட்டுப்பாளையம் தொகுதியை சிறுதொழில் துறையில் பின்தங்கிய (Backward area) பகுதியாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போதுள்ள விதிமுறைகளின்படி மேட்டுப்பாளையம் தொகுதியை சிறு தொழில் துறையில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்க இயலாது.

செல்வி எல். சுலோசனா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நீலகிரி மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ள மேட்டுப் பாளையத்தில் பல வருடங்களுக்கு முன்பு உருளைக்கிழங்கு வியாபாரம் மிகவும் சிறப்பாக இருந்தது. ஊட்டி, கோத்தகிரி போன்ற மலைப்